# <u>In the Court of the Additional District Munsif, Padmanabhapuram.</u>

O.S.No.142/2016 தேதி-05.03.2025

(P.W.1) - ராமகிருஷ்ணன்

<u>குறுக்கு விசாரணை</u>

1. பிரதிவாதி சொத்தில் இருந்த ரூ.1.50 லட்சம் மதிப்புள்ள ஐயனிமரத்தை பிரதிவாதி முறித்து சாலை ஓரமாக வைத்திருந்ததை நான் திருடிசென்றுவிட்டேன் என்பதால் அதற்கு நஷ்டஈடு வழங்கவேண்டும் என்றால் சரியல்ல. வாதி காவல் நிலையத்தில் கொடுத்த புகாரினை காவல் துறையினரிடம் சேர்ந்துகொண்டு எந்த நடவடிக்கையும் எடுக்கவிடாமல் செய்ததால் காவல் துறை துணைகண்காணிப்பாளரிடம் புகார் கொடுத்தார் என்றால் சரியல்ல, அதன் பிறகுதான் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. ஏ-பட்டிகை மற்றும் பி-பட்டிகை சொத்தை தவறாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. மேற்சொன்ன ஐயனி மரம் இருந்த இடத்தைதான் பி-பட்டிகை சொத்தாகா நினைத்து பி-பட்டிகை சொத்தாக காட்டப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. பட்டிகை சொத்து சம்மந்தமாக நீதிமன்ற ஆணையர் தாக்கல் செய்த வரைபடம் மற்றும் அறிக்கை நீ.ம.சா.ஆ-1 மற்றும் நீ.ம.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளதில் வரைபடத்தில் மஞ்சள் நிறத்தில் காட்டப்பட்டுள்ள பகுதிதான் வழக்கின் பி-பட்டிகை சொத்து என்றால் அதுபற்றி என்க்கு தெரியாது.

2. நீதிமன்ற ஆணையரின் அறிக்கை மற்றும் வரைபடத்தை நான் பார்த்துள்ளேனா என்றால் பார்க்கவில்லை. மேற்சொன்ன வரைபடத்தில் ஐயனி மரம் முறித்த இடத்தைதான் சிவப்பு நிறத்தில் புள்ளியாக காண்பிக்கப்பட்டுள்ளது. அதிலிருந்து வடக்கு மாறி ஐயனி மரம் முறித்த பகுதியாக காண்பிக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. சர்வே எண் 25/6-ல் எனக்கு எந்த உரிமையும் இல்லை என்றால் சரிதான். அதில் இருந்த ஐயனி மரத்திலும் எனக்கு எந்த உரிமையும் கிடையாது என்றால் சரிதான். ரூ.1.50 லட்சம் மதிப்புள்ள ஐயனி மரத்தை நான் எடுத்து சென்றுவிட்டதால்நஷ்டஈடாக பிரதிவாதிக்கு ரூ.1 லட்சம் வழங்கவேண்டும் என்று Counter Claim தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள இந்த வழக்கு நிலைக்கதக்கதல்ல என்றாலும் பிரதிவாதி தாக்கல் செய்துள்ள Counter Claim அனுமதிக்கப்படவேண்டும் என்றால் சரியல்ல.

(P.W.1) - ராமகிருஷ்ணன்

குறுக்கு விசாரணை

3. நான் என் முதல் விசாரணையிலும், குறுக்கு விசாரணையிலும் உண்மைக்கு புறம்பாக சாட்சியம் சொல்லியுள்ளதால் இந்த வழக்கு தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றால் சரியல்ல. பிரதிவாதி தாக்கல் செய்த Counter Claim அனுமதிக்கப்படவேண்டும் என்றால் சரியல்ல.